(4) கவன ஈர்ப்பு

நக்ஸல்பாரிகளின் பயங்கர நடவடிக்கைகளைத் தடுத்து பீதியுணர்வைப் போக்குதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்கள் சட்டப் பேரவை 41வது விதியின்கீழ் ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I wish to call the attention of the Hon'ble Chief Minister to a matter of urgent public importance, namely, the great anxiety and worry in the minds of the people which has been caused on account of the dangerous activities of the Naxalites in this State and the need to take immediate steps to stop such activities and infuse a sense of security among the general public of this State.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள நக்ஸல்பாரிகள் மாவோ அறிவுரைகளின் அடிப்படையில் வன்செயல்களிலும், ஆயுதந்தாங்கிய புரட்சியிலும் ஈடுபடுவது ஒன்றே தொழிலாளி வகுப்பினர் கடைத்தேற வழியென்று பொதுக்கூட்டங்களிலும் ரகசியக் கூட்டங்களிலும் இதுகாறும் அறிவுரைகள் வழங்கி வந்துள்ளனர். அவ்வப்போது, புரட்சியில் ஈடுபடும்படி மாவோவின் கூற்றுகள் அடங்கிய சிறு வெளியீடுகளை வெளியிட்டு வந்ததுடன், நக்ஸல்பாரிகள் அந்த அறிவுரைகள் அடங்கிய சுவரொட்டிகளையும் ஆங்காங்கே ஒட்டி வந்துள்ளனர்.

இம்மாநிலத்தில் உள்ள நக்ஸல்பாரிகளின் நடவடிக்கைகளை அரசு கூர்ந்தும் விழிப்புடனும் கவனித்து வருகிறது. அவர்களது செயல்களை ஒடுக்க இயன்ற நடவடிக்கைகள் அனைத்தும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. நக்ஸல்பாரிகள் நிகழ்த்தும் ஆட்சேப கரமான உரைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் மீது இ.பி.கோ. 124-வது பிரிவின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. மாவோவின் அறிவுரைகள் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டுவது குறித்தும் இயன்றவரையில் அதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து விழிப்புடன் செயல்பட்டதன் பலனாக, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த திரு. நாகிரெட்டி மற்றும் எட்டு நக்ஸல்பாரிகள் 1969 டிசம்பர் திங்களில் சென்னைக்கு வந்தபொழுது கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது ஆந்திரப் பிரதேசத்தில் வழக்குகள் பதிவாகியுள்ளபடியால் தக்க நடவடிக்கை எடுக்கப் படுவதற்காக அவர்கள் ஆந்திரப் பிரதேச காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் கைது செய்யப்பட்டதால், இவ்விரு மாநிலங்களையும் பாதிக்கும் நக்ஸல்பாரிகள் அச்சுறுத்தல் தடைப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில், கேரள மாநிலத்தைச் சேர்ந்த C. A தம்பி என்கிற மாதவன் தம்பி என அழைக்கப்படும்

திரு. M. தம்பி என்பவர் துப்புக்குட்டிப்பேட்டையில் (கடலூர் காவல் நிலையம்) கைது செய்யப்பட்டார். அவர் வசம் காணப்பட்ட மாவோ வெளியீடுகள் கைப்பற்றப்பட்டன. மேலும், சனவரி 23-ம் தேதி நள்ளிரவில், செங்கோட்டையைச் சேர்ந்த K. ராசு என்கிற ரவி என்பவரும், சென்னை புரசைவாக்கத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் என்பவரும் மாவோவின் அறிவுரைகள் அடங்கிய சுவரொட்டிகளை சென்னை சட்டக் கல்லூரி முன்னால் ஒட்டிக் கொண்டிருப்பதாக மாநில C.I.D. -யினால் தகவல் கொடுக்கப்பட்டு, சென்னை சட்டக் கல்லூரி போலீசார் அவர்களை கைது செய்து, அவர்கள் வசம் காணப்பட்ட மாவோ அறிவுரைகள் அடங்கிய சுவரொட்டிகளைக் கைப்பற்றினர். மேற்கொண்டு புலன் விசாரணை நடந்து வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள நக்ஸல்பாரிகள் இதுவரையில் பயங்கரச் செயல்கள் எவற்றிலும் ஈடுபடவில்லை. அரசும், காவலரும் விழிப்புடன் செயல்பட்டு உரிய நோக்கில் தக்க நடவடிக்கை எடுத்ததன் பலனை, தமிழ் நாட்டில் நக்ஸல்பாரிகளின் நடவடிக்கைகள் குறைந்துள்ளன. எனவே, பொதுமக்கள் இது குறித்து பீதியடையத் தேவையில்லை.

Dr. H. V. HANDE : Sir, while I am happy that some assurance has been given that suitable steps would be taken in the matter, may I know from the Hon. Chief Minister whether it is not a fact that some of these people have indulged in anti-national activities like trying to communicate information to other countries like China? Sir, we have already lost 50,000 sq. miles of territory in the northern borders of our country ond there is also a threat from the West Bengal borders. So, we must be nationalists and it does not matter if we follow different policies and principles and also different ideologies.

Mr. DEPUTY SPEAKER : Let the hon. Member put a question and let there be no debate.

Dr. H. V. HANDE : So, will the Hon. Chief Minister tell us whether he is going to invoke any special provisions of law to see that these people do not indulge in any anti-national activities.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் என்னுடைய அறிக்கையிலேயே விவரமாக சொல்லியிருக்கிறேன். அவர்களுடைய நடவடிக்கைகள் இன்னும் தீவிரப்படுத்தப்படுமானால், அவைகளைத் தடுக்க ஒடுக்க தமிழ்நாடு காவல் துறை தயாராகவே இருக்கிறது.

(5) 1970-71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம்.

திருமதி வி. ப. பழனியம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் வரவு-செலவு திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு இந்தத் திட்டத்தை வரவேற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததுபற்றி பெரிதும் மகிழ்வெய்துகிறேன்.